பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 02 ஞாயிற்றுக்கிழமை 18.07.2021 கதிர் 121

## 'லலித் வசந்த' சுட்டுக்கொலை

திட்டமிடப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடைய 'லலித் வசந்த' பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியாகியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சீதுவைப் பகுதியில் கட்டளையை ☞2

# தூத்துக்குடிக்கு நீர்மூழ்கியை திடீரென நகர்த்தியது இந்தியா

## பாதுகாப்புக் குறித்துக் கரிசனை

(ந.லோகதயாளன்)

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதையடுத்து இலங்கைக்கு அண்மையாகவுள்ள தூத்துக்குடித் துறைமுகப் பகுதியில் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் நடமாடுகின்றது.

அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலான 'சிந்துஷாஸ்ட்ரா' தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள ஐ.என்.எஸ். கட்டபொம்மன் கடற்படைக் கப்பல் தளத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ☞2



## நீதி கோரி ஹற்றனில் போராட்டம் மலையகச் சிறுமி மரணத்துக்கு



மலையகச்சிறுமியின் மரணம் தொடர்பில் உண்மை கண்டறியப்படவேண்டும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி ஹற்றனில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்களும் பங்கேற்றி ☞2

## வீட்டில் நடந்த சம்பவம் தொடர்பில் உண்மையைத் தெளிவுபடுத்துக!

### ரிஷாத்திடம் வேலுகுமார் வேண்டுகோள்



மலையக சிறுமியின் மரணம் தொடர்பில் முழுமையானதொரு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். தமது வீட்டில் நடந்த சம்பவம் தொடர்பில் உண்மை நிலைவரத்தை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டிய சமூகப் பொறுப்பு, கடமை ரிஷாத் ☞2

## 2,250 கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று!

### சிகிச்சை பலனின்றி 13 பேர் மரணம்

நாடளாவிய ரீதியில் இதுவரை 2 ஆயிரத்து 250 கர்ப்பிணிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என குடும்ப நல சுகாதார பிரி வின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளானவர்களில் 13 கர்ப்பிணிகள் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

கர்ப்பிணிகளுக்குத்தடுப்பூசிசெலுத்தும்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ☞2

## மலையகச் சிறுமியின் மரணத்தில் மறைந்துள்ள மர்மம் துலங்கட்டும்!

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



மலையகச் சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மை கண்டறிப்பட வேண்டும். சிறுவர்களைப் பணிக்கமர்த்த முயலும்முகவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சிறுவர்களின் கல்வி கற்கும் உரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும். -இவ்வாறு வலியுறுத்தி ☞2

## மேலும் 368 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 368 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் குளியாப்பிட்டிய பகுதியில் 117 பேரும், கண்டியில் 51 பேரும், கம்பஹாவில் 31பேரும் என அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 50 ஆயிரத்து 749 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மேலும் 4 விலங்குகளுக்கு கொரோனா

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மேலும் நான்கு விலங்குகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாக வனவிலங்கு மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு சிம்பன்சிகள் மற்றும் இரண்டு ஒராங்குட்டான்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றியதாகச் சந்தேகிக்கப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து விலங்குகளுக்குக் கொரோனாப் பரிசோதனைகளை மேற்கொண்டு தொற்று ஏற்பட்டுள்ளதா என ஆராயும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் ☞2

## ஆளுங்கட்சியில் அதிருப்தியில் இருக்கும் எம்.பிக்களுக்கு ஆறுதல்படுத்த புதிய பதவி

### ராஜபக்ஷ அரசு தீர்மானம்

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது. சுயாதீனமாக இயங்க முடிய வில்லை எனவும், உரியவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை எனவும் தமக்கு நெருக்கமானவர்களிடம் உள்ளக்கு முறல்களை அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் அறியமுடிகின்றது.

இராஜாங்க அமைச்சர் பிரியங் கர ஜயரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோர் தாம் அதிருப்தியில் இருப்பதை வெளிப்படையாகவே அறிவித்துவிட்டனர்.

இது தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி. தெரிவிக்கையில்,

ஆளுங்கட்சியில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அடுத்தபடியாக நாடாளுமன்றத்தில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர் நான்தான். ஆனாலும், சபையில் பின்வரிசையில் அமர்ந்துள்ளேன். அதிருப்தியால்தான் இவ்வாறு ☞2

## 2,250 கர்ப்பிணிகளுக்கு.............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

எனினும், கொரோனா வைரஸ் பரவலின் தீவிரத் தன்மையைக் கருத்திற்கொண்டு மிகவும் அவதானமாக இருக்குமாறு கர்ப்பிணிகளுக்கு வைத்தியர் சித்ரமாலி டி சில்வா எச்சரித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுமாயின், உடனடியாக சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## வீட்டில் நடந்த........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பதியுதீனுக்கு இருக்கின்றது. ஏனெனில், அவர் ஒரு மக்கள் பிரதிநிதி. கட்சித் தலைவர். இதற்கெல்லாம் அப்பால் ஒரு தந்தை. எனவே, அவர் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும். உண்மை வெளிவர, நீதியைப் பெற்றுக் கொடுக்க அவர் ஒத்துழைப்பு வழங்குவார் என நாம் நம்புகின்றோம்.

-இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். வேலுகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறார்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இந்நிலையில் அற்ப பணத்துக்கு ஆசைப்பட்டு சிறார்களை வெளியிடங்களுக்குத் தரகர்கள் வேலைக்கு அழைத்துச் செல்கின்றமையானது ஆட்கடத்தலுக்கு ஒப்பான செயல். எனவே, சிறார்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அவர்களைப் பொறுப்பேற்பவர்கள் என அனைவரும் ஏதோவொரு விதத்தில் குற்றவாளிகளே.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் மலையக சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பல தரப்பினரும் இது தொடர்பில் குரல் கொடுத்து வருகின்றனர். இளைஞர்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆகவே, இந்தச் சம்பவத்துக்கு நீதி நிவாரணத்தை வலியுறுத்தும் அதேவேளை சமூக மாற்றத்துக்கான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் இவ்வாறானதொரு துயர சம்பவம் நிகழாமல் இருப்பதைத் தடுக்க முடியும்.

மலையகப் பெருந்தோட்டப்பகுதிகளில் இருந்து சிறார்கள் வேலைக்கு செல்வதை தடுப்பது தொடர்பில் வலைத்தளங்களில் குரல் கொடுக்கும் இளைஞர்கள், களத்தில் இறங்கி சமூகப் பொறுப்புடன் விழிப்புணர்வை மேற்கொள்ள வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம் - என்றார்.

## நீதி கோரி.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்பட வேண்டும், தரகர் முதல் சிறுமியை வேலைக்கு அமர்த்தியவர்கள்வரை இதனுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

அத்துடன், வீட்டுப் பணியாளர்களாக செல்லும் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்தும், பெண்களுக்கான உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியும் இதன்போது குரல் எழுப்பப்பட்டது.

## 'லலித் வசந்த'...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மீறி பயணித்த அதிசொகுசு வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகனத்தில் பயணித்த நபர் பலியாகியுள்ளார்.

இதனையடுத்து, சுமார் 6 கொலைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 'லலித் வசந்த' என்பவரே உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

## மலையகச் சிறுமி......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

யுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபரில் டயகம 3ஆம் பிரிவில் இருந்து 15 வயதுச் சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

கடந்த 03ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 15ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக அவரது குடும்ப உறுப்பினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

குறித்த சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மை கண்டறிப்பட வேண்டும். சிறுமியின் மரணத்தில் மறைந்துள்ள மர்மம் துலங்க வேண்டும். நீதிக்கு மேல் எவரும் இல்லை. இந்த விடயத்தில் சரியான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதன் ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என நம்புகின்றேன்.

இதேபோன்று நாட்டில் எத்தனையோ விடயங்கள் எங்களுக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருக்கின்றன. முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் இந்த விடயம் நடைபெற்றுள்ளமையினாலேயே வெளியில் தெரியவந்துள்ளது.

எனினும், எங்களுக்குத் தெரியாமல் எங்கெங்கோ எல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் தினந்தினம் நடைபெற்று கொண்டுதான் இருக்கின்றன. அத்துடன், சிறுமிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களும், பாலியல் துஷ்பிரயோகங்களும் தினந்தோறும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை அரசு விரைந்து முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவும் அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களினால் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என நான் நம்புகின்றேன்.

குறித்த அதிகார சபைக்கு குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதன்காரணமாக அவர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதேபோன்று, சிறுவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படுவதுடன், அவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் தங்களது இளம் வயதிலேயே பணிக்கமர்த்தப்படுகின்றமை காரணமாகவே இவ்வாறான அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். எனவே, முதலில் முகவர்கள் ஊடாக சிறுவர்கள் பணிக்கமர்த்தப்படுகின்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

சிறுவர்களைப் பணிக்கமர்த்த முயலும் முகவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அரசிடம் வலியுறுத்துகின்றேன்.

அத்துடன், சிறுவர்களின் கற்றல் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு அவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆளுங்கட்சியில்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஒதுங்கியுள்ளேன். கவலை இருந்தாலும் சகித்துக்கொண்டுதான் செயற்படுகின்றேன். நான் வகித்த அமைச்சுப் பதவிகள் எல்லாம் சாதனை படைத்தவை. இருந்தாலும் தற்போது அமைச்சுப் பதவியைக் கேட்டுப்பெறப்போவதில்லை - என்றார்.

அதேவேளை, இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன கருத்துத் தெரிவிக்கையில், ஆனமடுவ என்பது இலங்கையிலுள்ள இரண்டாவது பெரிய தொகுதியாகும். இங்கு கப்பம் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் முறையிட்டால் தலைவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. எனது கரங்கள் தூய்மையானவை. அரசியல் வெறுத்துவிட்டது. கவலையில்தான் இருக்கின்றேன் - என்றார்.

அதேவேளை, அதிருப்தி நிலையில் உள்ள ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுகளை மேற்பார்வை செய்யும் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்குராஜபக்ஷ அரசு திட்டமிட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

## தெஹிவளை....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

விலங்குகளிடையே முதல் முறையாக, தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் 14 வயதான 'தோர்' எனும் சிங்கத்துக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அது குணமடைந்தது.

இதைத் தொடர்ந்து 12 வயதான 'ஷீனா' எனப்படும் சிங்கமும் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் குணமடைந்திருந்தது.

அதனிடையே, சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய 25 வீதமானவர்களுக்கு ஒரே நேரத்தில் மிருகக்காட்சி சாலையைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## தூத்துக்குடிக்கு......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இலங்கையையொட்டி சீனா தனது பலத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது என்ற சந்தேகத்தில் இலங்கையில் உள்ள துறைமுகங்களை சீன நிறுவனங்கள் குத்தகைக்கு எடுப்பதாகவும் இந்தியா ஐயம்கொள்கின்றது. இலங்கையோடு இந்திய அரசு நட்புறவை விரும்பினாலும் தமிழகத் தலைவர்கள் இலங்கையை நம்புவது கிடையாது. இதேநேரம், இந்தியாவின் நட்பு நாடான இலங்கை தற்போது சீனாவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது என இந்தியா கருதுகின்றது. சீனாவும் இலங்கைக்குப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகக் கடன்களை வாரி வழங்கி வருகின்றது. இந்தியாவில் வட பகுதியான லடாக் பகுதியில் சீனா ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதால் அங்கு ஏற்பட்ட பதற்றம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை. இரு நாட்டுப் பிரதிநிதிகள் இடையே பேச்சுவார்த்தை பலமுறை இடம்பெற்றாலும் அங்கு முழு அமைதி ஏற்படவில்லை.

இந்த நிலையிலேயே இந்தியாவின் தென்பகுதியான தமிழகக் கடலோரம் இலங்கையை அண்டிய பகுதியில் சீனா தனது கப்பற்படையை வலிமைப்படுத்த எண்ணுகின்றது. இது சீனா - இந்தியா போர் பதற்றத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஐ.என்.எஸ். கட்டபொம்மன், தூத்துக்குடி அனல்மின் நிலையம், கூடங்குளம் அணுமின் நிலையம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் என்பவற்றோடு தற்போது புதிதாக குலசேகரப்பட்டினத்தில் அமைய உள்ள ரொக்கெட் ஏவுதளம் என முக்கிய மையங்கள் உள்ளன.

அதன்படி, நாட்டின் அனைத்து எல்லைகளிலும் பீரங்கிகள், அதிநவீன போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், விமானம் தாங்கி கப்பல்கள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேநேரம் தேவை ஏற்படின் போர் விமானங்கள் சாலைகளில் இறங்கும் வண்ணம் சாலைகளும் அமைக்கப்படுகின்றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்–
076 443 8622
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com



**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இக்கட்டில் இலங்கை

நாட்டின் பொருளாதாரம் மிக மிக மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. ஆட்சி முறைமையை இராணுவமயப்படுத்துவதில் தீவிரம் காட்டும் அரசுக்கு பொருளாதாரத்தை தக்க வைப்பதற்கான அறிவும் இல்லை, தந்துரோபாயமும் கிடையாது எனப் பொருமுகின்றார் தென்னிலங்கை அரசியல் விமர்சகர் ஒருவர்.

யுத்தத்தினால் ஏற்பட்ட பின்னடைவை விட, மிகவும் மோசமான நெருக்கடி நிலையை நோக்கி நாட்டின் பொருளாதாரம் சென்று கொண்டிருக்கின்றது. இனி மேலும் கடன் வாங்கி காலத்தை ஓட்டலாம் என்ற நிலைமை இல்லை. இதனால் ஏற்படக்கூடிய மோசமான நெருக்கடிச் சூழல் குறித்து அரசியல் வாதிகளும், பொதுமக்களும், ஏன் பொருளாதார நிபுணர்களும் கூட, அலட்டிக்கொள்ளாமல் இருக்கின்றனர் என விசனம் தெரிவிக்கின்றார் அவர்.

கொவிட் தொற்றுப் பரவலால் உலக நாடுகள் எல்லாமே பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் இலங்கை கண்டு வரும் பொருளாதார சரிவு வீழ்ச்சி அதை எல்லாம் தாண்டி ஆபத்தானது. மோசமானது, மீண்டெழவே முடியாத நெற்றியடியை நாட்டுக்குத் தரப்போவது என்றும் எச்சரிக்கை செய்கின்றார் அவர்.

நாடு பெரும் தொகைக் கடன் தவணைப் பணத்தை செலுத்த வேண்டிய கடப்பாட்டில் சிக்கியிருக்கையில் அந்நிய செலாவணிக் கையிருப்பு கரைந்து போயுள்ளது.

இன்னும் மூன்று மாதத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்குக் கூட அந்நிய செலாவணிக் கையிருப்புப் போதாது.

இந்த வருடத்தில் வெளிநாட்டுக் கடன் தவணைப் பணமாக 370 கோடி அமெரிக்க டொலரை (சுமார் 75 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகம்) இலங்கை செலுத்த வேண்டியுள்ளது. இதில் இதுவரை ஆக 130 கோடி டொலர் கடன் நிலுவைப்பணமே செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான மூன்றில் இரண்டு பங்கு கடன் செலுத்தப்படாமல் நிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில் தான் நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பும் கரைந்து காணாமல் போயிருக்கின்றது.

வெளிச்சந்தையில் ரூபாவின் பெறுமதி மிக மோசமாக வீழ்ந்து விட்டது. இலங்கை அரசு தனது மத்திய வங்கி ஊடாக நாணய மாற்று வீதம் ஒன்றை அறிவித்து, அதனைப் பேணுவதாகக் கதை விட்டுக் கொண்டிருந்தாலும் வெளிச் சந்தையில் ரூபாவின் பெறுமதி வரலாறுகாணா – மீண்டெழ முடியாத – சரிவை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

இதனால் மீளச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனுக்கான கொடுப்பனவுக் கட்டணமும் ரூபாவின் கணக்கில் எக்கச்சக்கமாக எகிறி வருகின்றது.

ரூபாவின் பெறுமதி மோசமாக வீழ்ந்திருப்பதாலும் அந்நிய செலாவணிக் கையிருப்பு கரைந்துள்ளமையாலும், வெளிநாட்டில் கல்வி கற்கும் தங்கள் பிள்ளைகளின் கல்விக்குப் பணம் அனுப்ப முடியாத நிலையில் பெற்றோர்கள் அந்தரிக்கின்றனர். நாட்டுக்குத் தேவையான எரிபொருள்களுடன் பாரிய தாங்கிக் கப்பல்கள் காத்துக் கிடக்கின்றன. கட்டணத்தைச் செலுத்தினால்தான் அவற்றை இங்கு இறக்கலாம். உர விவகாரத்திலும் அதே நெருக்கடிதான். உர வகைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கும் தேவையான அந்நியச் செலாவணி நாட்டிடம் இல்லை. அதனால் அசேதன உரங்களுக்கு தடை என்ற கயிற்றை விட்டு தனது வங்குரோத்து நிலைமையை மூடி மறைக்க முயல்கின்றது அரசு – என உண்மையைப் போட்டுடைக்கின்றார் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இதற்கிடையில், சர்வதேச பிணைமுறிகள் மூலம் இலங்கை அறவிட்ட நூறு கோடி டொலர் (சுமார் 22 ஆயிரம் கோடி ரூபா) கடனின் முதிர்வு காலம் இம்மாத இறுதியாகும். இப்படிப் பெற்ற பிணைமுறிப் பெறுமதியை நாடு மாத இறுதியில் செலுத்த வேண்டும்.

இருக்கின்ற நெருக்கடியில் இந்த கடப்பாட்டை அரசு எப்படிச் சமாளிக்கப் போகின்றது என்று தெரியவில்லை.

இந்தக் கடன்கள் செலுத்தப்பட வேண்டிய நிலையில் இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு ஆக மூன்று பில்லியன் டொலர்கள்தாம். ஓர் ஒப்பீட்டுக்கு இன்று இந்தியாவிடம் 610பில்லியன் டொலரும், சீனாவிடம் 3 ஆயிரம் பில்லியன் டொலரும், பங்களாதேஷிடம் 43 பில்லியன் டொலரும் அந்நிய செலாவணிக் கையிருப்பு உள்ளது என்பதை நாம் கவனிக்கலாம்.

இவற்றை நோக்கும் போது, கடனிறுக்க வழியற்ற நாடாக – பொருளாதாரத்தில் தோற்றுப் போன நாடாக – இலங்கை அறிவிக்கப்படுவது வெகு தொலைவில் இல்லை என்றே தோன்றுகின்றது.

# ஆசிரியர்கள் முன்னெடுத்த வேலைநிறுத்தம் ஏழாவது நாளாக இன்றும் தொடர்ந்தது

ஆசிரியர் சேவை சங்கம் இணையவழிக் கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து விலகி முன்னெடுத்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) 7ஆம் நாளாகவும் தொடர்ந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் சேவை சங்கங்களின் தலைவர்களை பலவந்தமாக தனிமைப்படுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 24 ஆண்டுகளாக காணப்படும் அதிபர், ஆசியர்களுக்கான சம்பளப் பிரச்சினை தொடர்பாக அனைத்து அரசாங்கங்களுக்கும் தெரியப்படுத்திய போதிலும் தமது பிரச்சினைக்கு எவ்விதத் தீர்வும் கிடைக்கவில்லைஎனஇலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். எனவே தங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட் டால் தொடர்ந்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

14 சங்கங்கள் இணைந்து இவ்வாறு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இராணுவ முகாமில் பயிற்சி வழங்கப்படும்

## சரத் வீரசேகர மீண்டும் கூறுகின்றார்

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவதற்கான முன்மொழிவை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சமர்ப்பித்துள்ளார். இராணுவ முகாம்களில் குறித்த தலைமைப் பயிற்சி வழங்கப்படும் என்றும் இது போன்ற பயிற்சிக்கு சிறந்த இடம் அது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைப் பயிற்சி என்பது இளைஞர்களை இராணுவத்திற்குள் இணைக்கும் முயற்சி அல்ல என்றும் அது நாட்டில் சிறந்த ஒழுக்கம் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்பும் நட வடிக்கை என்றும் அவர் கூறினார்.

# எரிபொருள் பற்றாக்குறை நாட்டில் ஏற்படவில்லை

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை இருப்பதாக தெரிவித்து வெளியாகும் செய்திகள் அனைத்தும் தவறானவை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாட்டில் 27 நாள்களுக்கு போதுமான அளவு பெற்றோல் பங்குகளும், 24 நாள்களுக்கு போதுமான டீசல் பங்குகளும் இருக்கின்றன என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

பணம் செலுத்தாததால் எந்த ஒரு கப்பலும் திரும்பிச் செல்லவில்லை என்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# பஸ் மோதி விபத்து குடும்பஸ்தர் சாவு

கலஹா பிரதேச வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் வைத்து பஸ் மோதியதில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் (வயது - 54) உயிரிழந்துள்ளார்.

கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடதெல்தொட்ட பகுதியில் இருந்து, கண்டி கலகெதர பகுதியிலுள்ள தொழிற்சாலைக்கு ஆள்களை ஏற்றிச் செல்லும் பஸ் ஒன்றே அவர் மீது மோதியுள்ளது.

கலஹா பிரதேச வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் உள்ள பிரதான வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபர் மீது பஸ் மோதிய பின்னர், அவர் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# 800 கிலோ மஞ்சள் கட்டிகளுடன் களனி பொலிஸாரால் மூவர் கைது

சட்டவிரோமான முறையில் இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட 800 கிலோ மஞ்சள் கட்டிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களனிபொலிஸாரால்மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தள, கடவத்த மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# பொலிஸ் மா அதிபருக்கு ஊடக அமைப்புகள் கடிதம்

அண்மைக்காலத்தில் ஊடகவியலாளர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்படுவதுடன் அவர்களுடைய ஊடகத்துறை செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் மற்றும் தனிப்பட்ட விவரங்களை வழங்குமாறும் அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

ஊடகவியலாளர்கள் முகங்கொடுத்திருக்கும் இத்தகைய நெருக்கடிகளை இல்லாமல் செய்வதற்கும் அவர்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தி ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு பொலிஸ்மா அதிபருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட விவரங்களைவழங்குமாறுபிரயோகிக்கப்படும் அழுத்தம் தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத்தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் மீடியா ஃபோரம், இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் மற்றும் தமிழ் ஊடக ஒன்றியம் ஆகிய 6 அமைப்புக்களின் ஒன்றிணைவான ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பால் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொழுகை நடக்கும் நேரங்களில் கடைகள் திறக்க அனுமதியளிப்பு

## சவுதி இளவரசர் முகமதுபின் சல்மான் அறிவிப்பு



சவுதி அரேபியாவில் தொழுகை நடக்கும் நேரங்களில் கடைகளை அடைத்துவிடுவது பாரம்பரிய பழக்கமாக உள்ளது. இறை வழிபாட்டுக்காக முழு கவனத்துடன் நேரம் ஒதுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மரபு கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆனால் உலகம் முழுவதும் பரவி உள்ள கொரோனாத் தொற்று இத்தகைய பழக்கவழக்கங்களை அதிரடியாக மாற்றி வருகிறது.

சவுதி அரேபியாவில் தொழுகை நடக்கும் நேரங்களில் கடைகள் அடைக்கப்படுவதால் பொதுமக்கள் பொருள்கள் வாங்குவதற்காக சிரமப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தொழுகை நேரத்தில் ஏராளமானோர் கடைகள் முன்பு நீண்ட வரிசையில் நிற்கும் நிலை நிலவுகிறது. இதனால் வணிக வளாகங்களில் திரளும் மக்கள் கூட்டங்களால் தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து சவுதி அரேபியா இளவரசர் முகமதுபின் சல்மான் சில பொருளாதார, சமூக மாற்றத்துக்கான திட்டங்களை அறிவித்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக தொழுகை நடக்கும் நேரங்களில் கடைகளை திறந்து வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

இது சவுதி அரேபிய மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் சவுதி அரேபியாவில் பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகை செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கேன்ஸ் திரைப்பட விருது

# காலேப் லாண்ட்ரி ஜோன்ஸுக்கு சிறந்த நடிகருக்கான விருது

உலகப் புகழ்பெற்ற கேன்ஸ் திரைப்பட விழா ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடைபெறும். கடந்த ஆண்டு கொரோனாப் பரவல் காரணமாக கேன்ஸ் திரைப்பட விழா ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி தொடங்கிய 74 ஆவது கேன்ஸ் திரைப்பட விழா 17 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்த விழாவில் சிறந்த நடிகருக்கான விருது அமெரிக்காவின் காலேப் லாண்ட்ரி ஜோன்ஸுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நடிகைக்கான விருதை நோர்வே நாட்டை சேர்ந்த ரெனடா ரீன்ஸ்வே வென்றார்.

புகழ்பெற்ற பாம்ல் டோர் விருது டைடேன் எனும் பிரான்ஸ் திரைப்படத்துக்கு வழங்கப்பட்டது.

ZOOM மூலம் IELTS வகுப்பு
ஓய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-
076- 5500036




# கொவிஷீல்டு செலுத்திய பயணிகளுக்கு அனுமதி வழங்க பிரான்ஸ் அரசு முடிவு

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒக்ஸ்போர்டு-அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனம் உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பூசியை, இந்தியாவின் சீரம் நிறுவனம் 'கொவிஷீல்ட்' என்ற பெயரில் தயாரித்து வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இந்த தடுப்பூசி, பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



இந்த சூழலில், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குள் அனுமதிக்கப்படுவோர் செலுத்தியிருக்க வேண்டிய கொரோனா தடுப்பூசிகளின் பட்டியலில் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியின் பெயர் இடம் பெற்றிருந்தது.

ஆனால் 'கொவிஷீல்ட்' தடுப்பூசியின் பெயர் அதில் இடம்பெறாததால், இந்தியாவில் கொவிஷீல்டு தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இதையடுத்து இந்திய அரசு சார்பில் இந்த விவகாரம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களையும் அனுமதிக்க பல்வேறு ஐரோப்பிய யூனியன் நாடுகள் சம்மதித்த நிலையில், தற்போது பிரான்ஸ் நாட்டு அரசும் கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களை அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டுப் பிரதமர் ஜீன் கேஸ்டக்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், அஸ்ட்ரா ஜெனெகா வால் உருவாக்கப்பட்டு, இந்தியாவில் தயாரிக்கப் பட்ட கொரோனாத் தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்கள் வெளிநாடுகளிலிருந்து பிரான்ஸ் வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். அதே நேரம், டெல்டா வகைக் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்காக எல்லைகளில் சோதனைகள் கடுமையாக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து சுகாதாரத்துறை அமைச்சருக்கும் கொரோனா



இங்கிலாந்தில் கொரோனாத் தொற்று பரவல் மீண்டும் உச்சம் பெற்றுள்ள நிலையில், கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு மருத்துவ நிபுணர்கள் தரப்பில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. ஆனாலும், இதையும் மீறி கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு இங்கிலாந்து அரசு தயாராகி வருகிறது.

இந்நிலையில், இங்கிலாந்து சுகாதாரத் துறை மந்திரி சஜித் ஜாவித் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். லேசான அறிகுறிகளுடன் தொற்று பாதித்துள்ள அவர், வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் போரிஸ் ஜான்சன் இல்லத்திற்கு ஜாவித் சென்றார் என கூறப்படுகிறது. எனினும், பிரதமர் போரிஸ் ஜான்சனை நேரடியாக ஜாவித் சந்தித்தாரா என்பது பற்றி அவரது செய்தி தொடர்பாளர் எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை.




# பாலியல் தொல்லைகளை முறையிடுவதற்கு அனைத்துப் பள்ளிகளிலும் புகார் பெட்டிகள்

## தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் ஆலோசனை

பாலியல் தொல்லைகள் குறித்து மாணவ–மாணவிகள் அச்சமின்றி புகார் தெரிவிக்கும் வகையில் அனைத்து பள்ளிகளிலும் புகார் பெட்டி அமைக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள சி.எஸ்.ஐ. தேவாலய வளாகத்தில் குடியிருக்கும் மதபோதகர் எஸ்.ஜெயசீலன் என்பவர், அந்த வளாகத்தில் இயங்கிவரும் பள்ளியில் படிக்கும் 12 வயது மாணவியிடம் இயேசுநாதரின் கதைகளைக் கூறுகிறேன் எனவீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில் ஜெயசீலன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த சேலம் மகளிர் நீதிமன்றம், மதபோதகர் ஜெயசீலனுக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூபா.25,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஜெயசீலன் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த நீதிபதி பி.வேல்முருகன், கீழ் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்கிறேன். மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்கிறேன் என்று தீர்ப்பு அளித்தார்.

அந்தத் தீர்ப்பில் நீதிபதி, பொதுவாக மாணவிகள் தங்களுக்கு நடக்கும் பாலியல் கொடுமையை வெளியில் சொல்ல பயப்படுகின்றனர். பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள், நிர்வாகிகள் மூலம் பாலியல் தொல்லைக்கு ஆளாகும் அவர்கள், அவை குறித்து புகார் அளித்தால் தங்கள் கல்வி பாதிக்கப்படும்என்று அச்சப்படுகின்றனர். எனவே, அனைத்துப் பள்ளிகளிலும், சமூக நலத்துறை அதிகாரி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர், பொலிஸ் கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத பெண் காவல்துறை அதிகாரி, மாவட்ட கல்வி அலுவலர், உளவியல் பெண் நிபுணர், அரசு மருத்துவர்கள் ஆகியோர் அடங்கிய குழுவை தமிழக அரசு உருவாக்க வேண்டும்.

சுதந்திரமாக புகார் தெரிவிக்கும் வகையில் தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் புகார் பெட்டிகளை அமைக்க வேண்டும். அந்த புகார் பெட்டியின் சாவி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் செயலாளரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். வாரந்தோறும் மாவட்ட சமூக நலத்துறை அதிகாரியுடன் சென்று புகார் பெட்டியை திறந்து புகார் எதுவும் உள்ளதா? என ஆய்வு செய்ய வேண்டும். புகார் தெரிவிக்கப்பட்டு, அதில் முகாந்திரம் இருந்தால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கும் வகையில் பொலிஸாருக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

# சபரிமலையில் இன்று முதல் பத்தாயிரம் பக்தர்களுக்கு கேரள அரசு அனுமதி



கேரள மாநிலம் பத்தினந்திட்டா மாவட்டத்தில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு இந்தியா மற்றும் உலகம் முழுவதிலும் இருந்து கோடிக்கணக்கான பக்தர்கள் வந்துசெல்வது வழமை. கடந்த மே மாதம் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு பக்தர்கள் வர தற்காலிகத் தடை விதிக்கப்பட்டது.

ஆடி மாதப் பிறப்பையொட்டி, நேற்று முதல் வரும் 21ஆம் திகதி வரை கோவில் நடை திறக்கப்பட்டுள்ளது. இந்த 5 நாள்களும் கோயிலுக்கு வர பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கோயிலுக்கு வரும் பக்தர்கள் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் போட்டிருக்க வேண்டும் அல்லது கோயில் வருவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக, ஆர்.டி.பி.சி.ஆர். கொரோனாத் தொற்றுப் பரிசோதனை செய்து கொண்டு, தங்களுக்கு தொற்றுப் பாதிப்பு இல்லை என்பதற்கான சான்றிதழுடன் வர வேண்டும் என்றும், தனிமனித இடைவெளியைக் கடைப்பிடித்து முகக் கவசங்களை அணிந்து வரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சபரிமலையில் இன்று முதல் பத்தாயிரம் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கேரள மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, தினசரி 5,000 பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று முதல் இரண்டு மடங்கு பக்தர்களை அனுமதிக்க கேரள மாநில அரசு முடிவு செய்துள்ளது. அதே சமயம் பக்தர்கள், sabarimalaonline.org.in என்ற இணைய தளத்தில் முன்பதிவு செய்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# விவசாயிகளுக்கு உதவிட பசுமை பஸ்கள் திட்டம்

கொரோனா ஊரடங்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசா–யிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை எடுத்துச் செல்ல வசதியாக இந்தியன் ரயில்வே அமையம், கிசான் ரயில் என்ற சிறப்புச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதேபோல கர்நாடக அரசும், தனது அரசுப் போக்குவரத்து கழகம் (கே.எஸ்.ஆர்.டி.சி.) மூலமாக வேளாண் விளைபொருள்களை கொண்டு செல்ல பசுமை பஸ் சேவையை தொடங்க திட்டமிட்டுள்ளது. இது குறித்து கே.எஸ்.ஆர்.டி.சியின் நிர்வாக இயக்குநர் சிவயோகி ஊடகங்களுக்குக் கருத்துப் பகிரும்போது, கர்நாடகத்தில் கொரோனா ஊரடங்கால் விவசாயிகள் தங்களது விளை பொருள்களை விற்பனை செய்யப் போக்குவரத்து வசதி இல்லாததால் அவதிப்பட்டனர்.

மேலும் கொரோனா ஊரடங்கால் கர்நாடக அரசு போக்குவரத்துக் கழகமும் நஷ்டத்தை சந்தித்துள்ளது. இதனை ஈடு செய்யும் வகையில் பல்வேறு வசதிகளை போக்குவரத்து கழகத்தில் புகுத்தி வருகிறோம்.

அதன்படி, விவசாயிகள் பயன்பெறும் வகையிலும், போக்குவரத்து கழகத்திற்கு வருவாய்கிடைக்கும்நோக்கிலும் பசுமை பஸ் சேவையை தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் விவசாயிகள் குறைந்த செலவில் தாங்கள் விளைவிக்கும் பழங்கள், காய்கறிகளை சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவும், விற்பனைக்கு கொண்டு செல்லவும் முடியும்.

கர்நாடகஅரசுபோக்குவரத்து கழகம் 10 லட்சம் கிலோ மீற்றர் தூரத்திற்கு பஸ் சேவையை வழங்கி வருகிறது.

மொத்தம் 8,738 பஸ்கள் இயக்கப் பட்டு வருகின்றன. இவற்றில் 565 பஸ்கள் 10 ஆண்டு களுக்கு மேலான பழையவை. இந்த பஸ்களைப் புதுப்பித்து பசுமை பஸ் சேவைக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பஸ் சேவை விரைவில் தொடங்கப் படும் என்று தெரிவித்துள்ளார்.



# தேர்தல் ஆலோசகரை சரத்பவார் சந்தித்துப் பேச்சு

சில வாரங்களுக்கு முன்னர் சரத் பவாரை தேர்தல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் சந்தித்த நிலையில், இந்தியாவில் பா.ஜ.க.வுக்கு எதிராக வலுவான கூட்டணி அமைக்கப்படும் என்று பரவலாக பேசுசு எழுந்தது. மேலும், எதிர்க்கட்சிகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் சரத் பவாரைக் களமிறக்க திட்டமிட்டதாகவும் தகவல் வெளியாகியிருந்தது.

ஆனால், ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட சரத் பவாருக்கு திட்டம் எதுவும் இல்லை என தேசியவாத காங்கிரஸ் கட்சி மறுத்த நிலையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளமை முக்கியத்துவம் பெறுகிறது. சந்திப்புத் தொடர்பான மேலதிக விவரங்களெதுவும் இதுவரை வெளியாகவில்லை.

### போராட்டத்தில் ஈடுபட்டமையால்

# உத்தரப்பிரதேச காங்கிரஸ் கட்சியினர் மீது வழக்கு பதிவு

காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா நேற்று முன்தினம் உத்தரப்பிரதேச தலைநகர் லக்னோ சென்றார். மாநிலத்தில் அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டார்.

லக்னோ சென்றடைந்த அவர், உத்தரப் பிரதேசத்தில் சமீபத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் நடந்த வன்முறைகள் மற்றும் மாநில அரசு காவல் துறை அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதைக் கண்டித்து அங்குள்ள மகாத்மா காந்தி சிலைக்கு முன்பு திடீர் போராட்டத்தில் ஈடுபட்டார். பிரியங்கா வின் இந்த அமைதிப் போராட்டத்தில் மாநில காங்கிரஸ் தலைவர் அஜய்குமார் லல்லு மற்றும் சிலர் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் அனுமதியின்றி இந்தப் போராட்டத்தை நடத்தியதாக அஜய்குமார் லல்லு உள்பட 3 பேர் மீது லக்னோ பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளை வித்தல், அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டமை உள்ளிட்ட சட்ட மீறல்களுக்காக இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டதாக லக்னோ பொலிஸ் கமிஷனர் தாகூர் தெரிவித்திருக்கிறார்.



## மண்முனை மேற்கு கல்வி வலயத்துக்கு

# தொடுகணணிகள்

நவீன கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மாணவர்களிடையே மேம்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மண்முனை மேற்கு கல்வி வலயத்தில் உள்ள ஏழு பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான (டப்) தொடு கணணிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று குறிஞ்சாமுனை சக்தி வித்தியா லயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

மண்முனை மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வி.க.அகிலா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பின்தங்கிய கிராம அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன், இராஜாங்க அமைச்சரின் இணைப்புச்செயலாளர் லோ.ரொக்ஸ்மன் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வின் போது கரடியனாறு மகா வித்தியாலயத்திற்கு 56 கணணிகளும், மகிழவட்டவான் மகா வித்தியாலயத்திற்கு 49 கணணிகளும், நாவற்காடு நாமகள் வித்தியாலயத்திற்கு 56 கணனிகளும், அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்திற்கு 48 கணணிகளும், மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்திற்கு 48 கணணிகளும், அரசடித் தீவு விக்னேஸ்வர மகா வித்தியாலயத்திற்கு 49 கணனிகளும், கொக்கட்டிச்சோலை RKM வித்தியாலயத்திற்கு 49 கணனிகளும் இதில் 07 பாடசாலைகளைச் சேர்ந்த 40 ஆசிரியர் களுக்கான கணனிகளும், 315 மாணவர்களுக்கான கணனிகளுமாக மொத்தமாக 355 கணணிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பில் கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றமையை அவதானிக்க முடிவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான பகுதிகளில் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள், துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தலைமையில் மாமாங்கம் சதா சகாயமாதா ஆலயத்திலும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் இடம்பெற்றன. இதில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெருமளவில் கலந்துகொண்டு, தங்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றிச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிறைந்துரைச்சேனை, அஸ்லம் ஸ்டோர் வீதியிலுள்ள வீடொன்றில் வைத்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதை வியாபாரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 10,820 ரூபா பணம் ஆகியவற்றுடன் 25 வயதுடைய இளம் போதைப்பொருள் வியாபாரியொருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார். காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்டதிச்சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன் போதைப் பொருளும் போதைப்பொருள் விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தொகையும் கைப்பற்றப்பட்டது.

அத்தோடு தமது அடையாள அட்டைகளை வழங்கி போதைப் பொருளை கடனாகப் பெற்றுக் கொண்டோரின் அடையாள அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட அடையாள அட்டைகளின்படி மேலும் பலரைக்கைது செய்யும் நடவடிக்கைகளை வாழைச்சேனை பொலிஸாருடன் இணைந்து காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். அதே நேரம் குறித்த வீட்டில் கடந்த வருடம் 16 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று கைது செய்யப்பட்ட இளைஞனின் உறவினரும் கைது செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.






# உப்பாறு கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உப்பாறு கடற்கரையில் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர், நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

வில் வெளியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இஸ்மாயில் றிஸ்வி (வயது 42) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உப்பாறு கரையோரத்தில் அமைக்கப்பட்டிருந்த மீன் கூடுகளில் மீன்களைச் சேகரிக்கச் சென்ற மீனவர்களால், சடலம் அவதானிக்கப்பட்டு தமக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். கிண்ணியா தள வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கிண்ணியா பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு






# ஒலிம்பிக்கில் பங்குபெறுவது உறுதி ஜோகோவிச் டுவிட்டரில் தெரிவிப்பு

32 ஆவது ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் வருகிற 23 ஆம் திகதி தொடங்குகிறது. கொரோனாப் பரவல் காரணமாக ரசிகர்கள் அனுமதியின்றி கடும் கட்டுப்பாடுகளுடன் இந்தப் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. கட்டுப்பாடுகள், காயம் உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக முன்னணி டென்னிஸ் வீரர்களான ரோஜர் பெடரர், ரபெல் நடால், டொமினிக் திம், வாவ்ரிங்கா, வீராங்கனைகள் செரீனா வில்லியம்ஸ், சிமோனா ஹாலெப், பியான்கா, ஏஞ்சலிக் கெர்பர், விக்டோரியா அஸரென்கா உட்பட பலர் ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலகிவிட்டனர்.

தான் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கு 50 சதவீத சாத்தியம் தான் இருப்பதாக உலகின் முதல் நிலை வீரரும், 20 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சமீபத்தில் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது தனது முடிவில் உறுதியடைந்திருக்கும் அவர், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கப் போகிறேன் என அறிவித்துள்ளார்.

இது குறித்து ஜோகோவிச் தனது டுவிட்டர் பதிவில், 'நமது நாட்டு அணியுடன் இணைந்து ஒலிம்பிக் பதக்க வேட்டைக்காக டோக்கியோ செல்வதை பெருமையாகக் கருதுகிறேன். செர்பியா அணிக்காக விளையாடுவது எனக்கு எப்பொழுதும் விசேடமான மகிழ்ச்சியையும், உத்வேகத்தையும் அளிக்கும். எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்த எனது சிறந்த திறனை வெளிப்படுத்துவேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டுக்கான ஆஸ்திரேலிய ஓபின், பிரெஞ்ச் ஓபின், விம்பிள்டன் பட்டங்களைத் தொடர்ச்சியாக வென்றிருக்கும் ஜோகோவிச் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதுடன் அடுத்து வரும் அமெரிக்க ஓபின் பட்டத்தையும் வென்றால், ஒரே ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லாம் மற்றும் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையைப் படைக்க முடியும். இந்த அரிய சாதனையை 988 ஆம் ஆண்டில் ஜேர்மனி வீராங்கனையான ஸ்டெபி கிராப் மட்டுமே நிகழ்த்தியிருக்கிறார்.

# தமிழ்நாடு பிரீமியா லீக் தொடர் நாளை ஆரம்பமாகிறது




தமிழ்நாடு பிரீமியா லீக் (ரி.என்.பி.எல்.) தொடரின் ஐந்தாவது சீசன் போட்டிகள் நாளை திங்கட்கிழமை சென்னையில் தொடங்குகின்றன. கொரோனா பாதிப்பு காரணமாக ரசிகர்கள் இன்றி முதன் முதலாக போட்டிகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் இளைஞர்கள் மத்தியில் கிரிக்கெட் ஆர்வத்தை மேலும் தூண்டும் வகையிலும், மாவட்டங்களில் கிரிக்கெட் ஆட்டம் வளரவும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் ரி.என்.பி.எல். எனப்படும் ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடர் நடத்தப்படுகிறது. சேப்பாக் சூப்பர் கில்லீஸ், திண்டுக்கல் டிராகன்ஸ், நெல்லை ராயல் கிங்ஸ், லைகா கோவை கிங்ஸ், சேலம் ஸ்பார்ட்டன்ஸ், மதுரை பாந்தாஸ், ரூபி திருச்சி வாரியாஸ், ஐடிரீம்ஸ் திருப்பூர் தமிழன்ஸ் உள்ளிட்ட 8 அணிகள் தொடரில் இடம்பெற்று விளையாடுகின்றன. நடப்புச் சம்பியனான சேப்பாக் சூப்பா கில்லீஸ் அணி பட்டத்தை தக்க வைக்க போராட வேண்டியுள்ளது. இதற்கிடையே இரண்டாவது இடம்பெற்ற திண்டுக்கல் டிராகன்ஸ் அணி கப்டன் அஸ்வின் இங்கிலாந்து சென்றுள்ள நிலையில் போட்டியை எதிர்கொள்கிறது. நெல்லை ராயல் கிங்ஸ், லைகா கோவை கிங்ஸ், மதுரை பாந்தாஸ், சேலம் ஸ்பார்ட்டன்ஸ் உளிட்ட அணிகள் புதிதாக கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களும் கோப்பையை வெல்லும் முனைப்பில் உள்ளனர். திருச்சி வாரியாஸ், திருப்பூர் தமிழன்ஸ் அணிகள் முந்தைய சீசன்களில் சரிவர ஆடாத நிலையிலும், பலமான அணிகளை எதிர்பாராத நேரத்தில் வீழ்த்தும் வல்லமையைப் பெற்றுள்ளனர். ரசிகாகள் இன்றி போட்டிகள் நடைபெறுவது அனைத்து அணிகளுக்கும் சவாலை சமமாக்கும் என சிஎஸ்ஜி கேப்டன் கௌஷிக் காந்தி கூறியுள்ளார். சி.எஸ்.ஜி. அணியில் முக்கிய வீரர்களான சந்தீப் வாரியா, சாய் கிஷோர், பாந்தாஸ் அணி வீரர் வருண் சக்கரவாத்தி ஆகியோர் இலங்கை - இந்திய தொடரில் விளையாடும் இந்திய தேசிய அணியில் இடம்பெற்றுள்ளதால், அவர்கள் ரி.என்.பி.எல். தொடரின் பின்பாதியிலேயே இடம்பெற்று விளையாடுவார்கள்.

# இந்தியா – இலங்கை
## ஒருநாள் போட்டித்தொடர் இன்று ஆரம்பம்!

இந்தியா – இலங்கை அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் முதலாவது ஆட்டம் கொழும்பில் இன்று நடைபெறுகிறது.



இவ்விரு அணிகளும் இதுவரை 159 ஒரு நாள் போட்டிகளில் நேருக்கு நேர் சந்தித்துள்ளன. இதில் 91 இல் இந்தியாவும், 56 இல் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி சமநிலையிலும், எஞ்சிய 11 ஆட்டங்களில் முடிவு பெறப்படாமலும் இருந்துள்ளன. இந்திய அணி இலங்கை மண்ணில் அந்த நாட்டு அணிக்கு எதிராக நேரடி ஒரு நாள் தொடரில் ஆடுவது இது 9 ஆவது முறையாகும். இதில் கடைசி 4 ஒரு நாள் தொடர்களை இந்திய அணி வரிசையாக வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# டோக்கியோ ஒலிம்பிக் போட்டி இரண்டு வீரர்களுக்கு கொரோனா



டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு ஒலிம்பிக் கிராமத்தில் தங்கியுள்ள இரண்டு வீரர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இன்னும் 5 நாட்களில் தொடங்கி நடைபெற இருக்கிறது. இந்தப் போட்டிகளுக்காக சர்வதேச வீர, வீராங்கனைகள், அலுவலர்கள் அடங்கிய அணிகள் ஜப்பானுக்கு வந்தவண்ணம் உள்ளன. போட்டியில் பங்கேற்பவர்கள் தங்குவதற்கு நவீன வசதிகளுடன் கூடிய ஒலிம்பிக் கிராமம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. கொரோனாப் பரிசோதனைக்கு பிறகு ஒவ்வொரு அணியினரும் ஒலிம்பிக் கிராமத்தில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கும் இடங்களில் தங்கி வருகின்றனர்.

இந்த நிலையில், ஒலிம்பிக் கிராமத்தில் தங்கவைக்கப்பட்டு இருப்பவர்களுக்கு நடத்தப்பட்ட வழக்கமான பரிசோதனையில் வீரர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. இதையடுத்து அவர்கள் விடுதி அறையில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். கொரோனாவினால் வீரர்கள் பாதிக்கப்பட்டு இருக்கும் தகவலை வெளியிட்டு இருக்கும் போட்டி அமைப்புக் குழுவினர் அவர்கள் யார்? என்பது குறித்து எந்தவித விவரத்தையும் வெளியிடவில்லை.




# பார்சிலோனா கழக அணிக்காக
## மேலும் 5 ஆண்டுகளுக்கு விளையாட மெஸ்ஸி ஒப்பந்தம்!

லயோனல் மெஸ்ஸி பார்சிலோனா கழக அணிக்காக தொடர்ந்து விளையாடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 34 வயதான மெஸ்ஸியின் 21 ஆண்டுகால ஒப்பந்தம் சமீபத்தில் முடிவடைந்தது. இதைத்தொடர்ந்து மெஸ்ஸி எந்த அணிக்கும் சொந்தமில்லை என்றும் சுதந்திரமான வீரர் என்றும் அறிவிக்கப்பட்டது. அவர், நினைத்தால் எந்த கழக அணியுடன் வேண்டுமானாலும் ஒப்பந்தம் செய்து விளையாடலாம் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால், தற்போது மெஸ்ஸியின் ஒப்பந்தம் மேலும் 5 ஆண்டுகளுக்கு பார்சிலோனா கழக அணியுடன் நீடிக்கப்பட்டுள்ளது.

மெஸ்ஸியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதை பார்சிலோனா கழக அணி ஏற்றுக்கொண்டுள்ளது. அதேவேளை, கழகம் தற்போது கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால், மெஸ்ஸிக்கு வழங்கப்படும் ஊதியம் 5 சதவீதத்தினால் குறைக்கப்படுகிறது எனவும் இதை மெஸ்ஸி தரப்பு ஏற்றுக்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒப்பந்த நீடிப்பு குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை கண்டித்து களுத்துறையில் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட்டுவரும் ஜனநாயக விரோதச் செயற் பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி யால் நேற்று (சனிக்கிழமை) களுத்துறை நகரில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேராவால் களுத்துறைநகரசபைக்கு அண்மையில் நேற்று (சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டம் ஐக்கிய மக்கள் சக்தி யினதும் பிரதான எதிர்க்கட்சியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நடைபெற்றது.

'ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாத்தல்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப் பாட்டத்தில் சரத்பொன்சேகா, ராஜித சேனாரத்ன உள்ளிட்ட முக்கிய நாடாளு மன்ற உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் நகர மற்றும் பிரதேசசபை உறுப்பினர் பலரும் பெருமளவான கட்சி ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அடக்குமுறைகளுக்கு அடிபணியமாட் டோம்', 'வாழ்க்கைச்செலவைக் குறை யுங்கள்', 'மீனவர்களுக்குரிய நிவார ணத்தை வழங்குங்கள்', 'ஆசிரியர்களை அவமதிக்கவேண்டாம்', 'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் தாமதமின்றி நீதி நிலை நாட்டப்படுவதை உறுதிப்படுத்துங்கள்', 'பசிலாலும் முடி யாது' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன் அரசாங்கம் முன்னெடுத்துவரும் ஜனநாயகவிரோத செயற்பாடுகளை உடனடியாகநிறுத்திக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தும் வகையிலான கோஷங்களையும் எழுப்பினர்.

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஜோன் கொத் தலாவல தேசிய பாதுகாப்புப் பல் கலைக்கழகச் சட்டமூலத்துக்கு எதிரா கவும், உரப்பிரச்சினை, ஆசிரியர்களின் ஊதியப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறும் வலியுறுத்தி அண்மை யில் பலதரப்பட்டவர்களாலும் ஆர்ப் பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலை யில், அவற்றில் சில போராட்டங்கள் பொலிஸாரால் அடக்கப்பட்டன. அதே வேளை மேற்படி சட்ட மூலத்துக்கு எதிரா கவும்அரசாங்கத்தின்ஜனநாயகவிரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகவும் நாடாளு மன்ற சுற்று வட்டத்தில் கடந்த வாரம் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரணைதீவு பாடசாலையை புனரமைக்க கடற்படை தடை

கிளிநொச்சி பூநகரி கோட் டத்திற்குட்பட்ட இரணைதீவு பாடசாலையைப் புனரமைக் கும் பொருட்டு ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள் வதற்காக சென்றகுழுவினரை கடற்படை அனுமதி மறுத்து திருப்பி அனுப்பியுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது –

இரணைதீவு மக்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரண மாக இடம்பெயர்ந்து இரணை மாதாநகரில் வசித்து வந்த நிலையில் யுத்தம் நிறை வுக்கு வந்த பின்னர் கடந்த 2018 இல் 366 நாள்கள் தொடர் போராட்டத்தின் பின் னர் இரணைதீவில் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

மீள்குடியேற அனுமதிக் கப்பட்ட மக்கள் அன்று தொடக் கம் பல்வேறு அடிப்படை வசதி கள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது அங்குள்ள கிளி. இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையினை புனரமைக்க நடவடிக்கைக்கு 70 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

14.07.2021 இல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 12.10.2021 இல் நிறைவுபெறும் வகையில் புனரமைப்புப் பணிகளை மேற் கொள்ள முடிவு செய் யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பாடசாலையின் அதி பர், வலயக் கல்விப் பணிம னையின் தொழிநுட்ப உத்தி யோகத்தர், ஒப்பந்தகாரர் உள் ளிட்ட குழுவினர் இரணை தீவுக்கு செல்வதற்காக இர ணைமாதாநகர் கடற்கரைக் குச் சென்றபோது அங்கிருந்த கடற்படையினர் அவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு அனு மதியின்றி இரணைதீவுக்கு அனுமதிக்க முடியாது என கடற்படையினர் தெரிவித் தனர். ஆனால் சுமார் 150 குடும்பங்கள் வரை இரணைத் தீவில் வசித்து வருகின்றனர் .

ஏனைய மக்களும் மீள குடியேறுவதற்கு பாடசாலை மிக மிக முக்கியமானது என்ப தால் சேதமுற்றுள்ள பாடசா லையைப் புனரமைக்க மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கே கடற்படையினர் அனுமதி மறுத் துள்ளனர் என பொது மக்கள் குறிப்பிடுகின்றனர்.

## முகக்கண்ணாடித்திரை மட்டுமே அணிவது தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் செயல்



பொதுவில் முகக்கண்ணாடித்திரை மட்டுமே அணிவது கொவிட் வைரஸ் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என சுகாதார அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே முகக்கவசம் அணிவது கட்டாயம் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் ரஞ்சித் படுவந்துடுவ குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் வைரஸ் பரவாமல் இருக்க முகக்கவசத்தை சரியாக அணிய வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக ஒரு முகக்கண்ணாடித் திரை பாதுகாப்பு கருதி மட்டுமே அணியப்படுவதாக படுவந்துடுவ சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஒரு முகக்கண்ணாடித்திரையை மட் டுமே பொதுவில் அணிவது தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறுவதாகும் என்று படுவந்துடுவ குறிப்பிட்டுள்ளார்.

## கூரிய ஆயுதத்தால் தாக்கு வெலிகமவில் ஒருவர் சாவு

வெலிகம, கப்பரதொட்ட பகுதியில் இருவர் மீது கூரிய ஆயுதங்களால் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.45 மணிய ளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் ஜரிவிக்கப்படுகின்றது.

50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். காயங்களுக்கு உள்ளான நபர் மாத்தறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளதுடன் வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொவிட் தொற்றிய குழந்தைகளுக்கு புதியவகை நோய் ஏற்படுகின்றதாம்

கொவிட் தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உள்ளக உடல் உபாதைகளுக்கு உள்ளான 34 குழந்தைகள் இலங்கையில் இனங்காணப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுள் 21 குழந்தைகள் கொழும்பு ரிஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நோய்க்கு உள்ளானதாக சந்தேகிக்கும் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளதாக விசேட வைத்தி யர் நளின் கிதுல்வத்த தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றுக்கு உள்ளாகி 2 முதல் 6 வாரத் திற்குள் இந்த நோய் ஏற்படுவதாக அவர் தெரிவித் துள்ளார்.

## பேலியகொட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட பெண் சாவு

பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

பேலியகொடை – துட்டுகெமுன பகுதியைச் சேர்ந்த 49 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந் துள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

குறித்த பெண் தங்க நகை கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) காலை திடீர் சுகவீனமடைந்த நிலையில், குறித்த பெண் தேசிய வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பாடசாலை ஆசிரியர்களுக்கு மன்னாரில் பைஸர் தடுப்பூசி





*மன்னார் மாவட்டத்தில் மன்னார் மற்றும் மடு, வலய கல்வி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் கற்பிக்கும் பாடசாலை ஆசி ரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று (சனிக்கிழமை) சித்தி விநாயகர் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது.*

*மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,மன்னார் நகர் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவை இணைந்து தடுப்பூசி செலுத்தும் நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.*

*மன்னார் மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிட மாகவும், அதேநேரம் மன்னார் மாவட்ட கல்வி வலயங்களில் கல்வி கற்பிக்கின்ற ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரி- யர்களுக்கும் இன்றைய தினம் விசேடமாக 'பைஸர்' தடுப்பூசிகள் வழங்கப்படுவதுடன், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இறுதிக் கட்ட தடுப்பூசி செலுத்தும் பணி இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2021இல் வெளியிடப்பெற்றது.